



மதுரை மாவட்டம், சத்திரப்பட்டி அழகர்கோவில் ரோடு சாலையில் அமைந்துள்ள கிரெசன்ட் கல்லூரியில் வாழ்வாதார தொழில் காப்பகத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் துவக்கி வைத்து மைய செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தினர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார்,சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் ஒன்றியம் வீரபாண்டிய பட்டணத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் தமிழக மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் கலந்து கொண்டார் உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், வழக்கறிஞர் கிருபாகரன் நகர் மன்ற உறுப்பினர் செந்தில், ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் மேல சொக்கநாதபுரம் பேரூராட்சி பகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் நடைபெற்றது. வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. போடி மேற்கு ஒன்றிய செயலாளர் லட்சுமணன், நகர் மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர், போடி நகர செயலாளர் புருஷோத்தமன், இளைஞர் அணி மாவட்ட அணி அமைப்பாளர் அஜிப்கான் மற்றும் அரசு அதிகாரிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



புதூர் ஊராட்சி ஒன்றியம், கவுண்டன்பட்டியில் கவுண்டன்பட்டி, வெளவால்தொத்தி கிராம மக்கள் பயன்பெறும் வகையில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டு முகாமில் வழங்கப்படும் சேவைகள் குறித்து கேட்டறிந்தார். நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் தினகரன் சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் விமலா, புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, மாவட்ட பிரதிநிதி காளிமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம்ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் இராஜக்காள்பட்டி ஊராட்சி T.அழகாபுரி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி புதிய இரண்டு வகுப்பறை கூடுதல் கட்டிடத்தை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். உடன் ,மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் ஆசிரியர்கள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, அக். 1–

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–



இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நாளை (02.10.2025–வியாழக்கிழமை) மாலை 07.00 மணியளவில் மதுரை விமான நிலையத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மதுரை விமான நிலையத்தில் 2ஆம் தேதி மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட

# தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி – மு.மணிமாறன் அறிக்கை!

*மதுரை, அக்.1-*

*கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ராமநாதபுரத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வரும் 2ஆம் தேதி விமானம் மூலம் மதுரை வருகிறார் அன்று மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட திமுக சார்பில் விமான நிலையத்தில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கும் நிகழ்வில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்குமாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்கள் அதன் விபரம்*

*ராமநாதபுரம் மாவட்டத்தில் 03.10.2025ம் தேதி நலத்திட்ட உதவிகள் வழங்குதல், ஆய்வு பணி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரை வரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நாளை (02.10.2025 - வியாழக்கிழமை) மாலை 7 மணிக்கு மதுரை விமான நிலையத்தில் இரு வண்ணக் கொடிகளை கையில் ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளது.*





*இந்நிகழ்ச்சியில் மதுரை வடக்கு தெற்கு மாவட்டத் திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று முதல்வர் வரவேற்பு நிகழ்ச்சியினை*

*சிறப்பிக்க வேண்டுமென மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*

# அம்பத்தூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, அக். 1-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுத கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 222 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (29.09.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 88, தேவா நகர் மெயின் ரோடு, கொடிக்கம்பம் அருகில். 2) வட்டம் 90, 15 வது தெரு, பாடி, புதுநகர் மெயின் ரோடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத் தரமாட்டோம்.

தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

